# கலைகளின் அன்பன்
# கலைஞர்களின் நண்பன்



நினைவுரை

## பேராசிரியர் நந்தி

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறக்கட்டளை
யாழ்ப்பாணம்

# கலைகளின் அன்பன்
# கலைஞர்களின் நண்பன்

நினைவுரை

பேராசிரியர் நந்தி

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறக்கட்டளை
யாழ்ப்பாணம்.
2004

# பேராசிரியர். சு. வித்தியானந்தன் நினைவு அறக்கட்டளை

(1) காப்பாளர்கள்:

பேராசிரியர். கா. சிவத்தம்பி
பேராசிரியர். அ. சண்முகதாஸ்
பேராயர். கலாநிதி. எஸ். ஜெபநேசன்

(2) தகைசார் மதியுரைஞர்கள்:

பேராசிரியர். சபா. ஜெயராசா
கலாநிதி. எஸ். சிவலிங்கராஜா
செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்
திரு. செல்வன். வித்தியானந்தன்.

(3) பணிப்பாளர்:

கலாநிதி. ம. சண்முகலிங்கம்

(4) அவைக்கூட்டுநர்:

கலாநிதி. திருநாவுக்கரசு. கமலநாதன்

(5) இணைப்பாளர்:

கலாநிதி. கி. விசாகரூபன்

(6) திட்ட வடிவமைப்பாளர்:

திரு. க.இ. கமலநாதன்

(7) திட்ட அமுலாக்குனர்:

திரு. க. திலகநாதன்

## முன்னுரை

பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவு அறக்கட்டளையாகிய நாம், பேராசிரியருடைய எண்பதாவது அகவையினை நினைவு கூறுமுகமாக ஏற்பாடு செய்திருந்தன 'கலையின் அன்பன், கலைகளின் நண்பன், என்ற தலைப்பிலான சொற்பொழிவைச் சிறிய நூலுருவில் வெளிக்கொணர்வதையிட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

08.05.1924 அன்று யாழ்ப்பாணத்தில் பிறந்த பேராசிரியர் 1941 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று அங்கு பேராசிரியர்களான சுவாமி விபுலாநந்தர், க. கணபதிப்பிள்ளை வி. செல்வநாயகம் முதலானோரிடம் கல்விகற்கும் வாய்ப் பினைப் பெற்றார். 1944 இல் கலைமாணிப்பட்டத்தினையும் 1946 இல் முதுகலை மாணிப்பட்டத்தினையும் பெற்றுக் கொண்ட இவர், 1948இல் இலண்டன் பல்கலைக்கழகத்தில் 'பத்துப்பாட்டு- வரலாற்று, சமூக, மொழியியல் நோக்கு' எனும் விடயம் பற்றி ஆராய்ந்து கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1970 இல் பேராசிரியர்ப் பதவியினைப் பெற்றுக் கொண்ட வித்தியானந்தன் அவர்கள் 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணை வேந்தரானார். பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாகத் துணை வேந்தராயக் கடமையாற்றிய பேராசிரியர், இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் கல்விமாற்றும் சமூகமேம் பாட்டுக்காக பெரிதும் முயன்றுழைத்த பின்னர் 1989 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தம் வாழ்நாளில் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழர் பண்பாட்டு ஆய்வினால் மிகுந்த புலமைச் சிரத்தையினைச் செலுத்திய பேராசிரியர், அதன் விளைபொருள்களாகப் பல நூல்களை நூற்றுக் கணக்கான ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதிய பெருமைக் குரியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியது மட்டுமல்லாது, இப்பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் மற்றும் சித்தமருத்துவத்துறை முதலானவற்றைக் காலமுணர்ந்து தோற்றுவித்ததுடன் இராமநாதன் நுண்கலைக்

கல்லூரியைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்த பெருமைக்கும் உரியவராவார்.

ஈழத்தமிழரின் சுதேசிய கலைவடிவமான 'நாட்டுக்கூத்து' மீள் கண்டுபிடிப்புக்களும் அவற்றின் நவீனவாக்கத்துக்கும் பேராசிரியர் ஆற்றிய பங்கு கணிசமானதாகும். குறிப்பிட்ட ஒரு சில சமூகப்பிரிவு மக்களிடம் மட்டுமே 'குடிகொண்டிருந்த' கூத்துக்கலையை அவர்களிடம் இருந்துப் விடுவித்து படித்தவர், பாமரர் என அனைத்துப் பிரிவு மக்களையும் சுவைக்கச் செய்ததில் பேராசிரியரின் பங்கு அளப் பரியதாகும். நாட்டுக்கூத்துக்களை அரங்கேற்றியமை, அண்ணா விமாரைக் கௌரவித்தமை முதலான செயற்பாடுகள் பேராசிரியரது செயற்பாடுகளில் விதந்து குறிப்பிடத்தக்கவையாகும்.

கோலாலம்பூர், பரீஸ், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழராய்ச்சி மகாநாடுகளில் பங்கு பற்றிக் காத்திரமான ஆய்வுக்கட்டுரைகளைப் படித்த பேராசிரியர் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே நடத்திக்காட்டித் தமிழுலகை வியப்பிலாழ்த்திய மாமனிதர்.

தமிழர் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்புக்காக அரும்பணியாற்றிய பேராசிரியர், 'தமிழ்த்தேசியம்' பற்றிய பிரஞ்ஞையுடன் 1970 களிலிருந்தே செயற்பட்டுவந்தவராவார். கலைமரபுகளுக்கூடாகத் தமிழத்தேசியத்தை ஒருங்கிணைப்பதில் பேராசிரியர் பெருவெற்றியீட்டியிருந்தார்.

மேற்குறித்த பெருமைகளுக்கெல்லாம் சொந்தக்காரரான பேராசிரியரின் காலமுணர்ந்த பணிகளைத் தமிழ்ச்சமூகம் என்றும் நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இச் சிறிய வெளியீட்டினை நூலாக்கம் செய்துள்ளோம். தமிழ் கூறும் நல்லுலகம் பேராசிரியரின் சிலபணிகளை வழிவழியாக நினைவில் கொள்ள வேண்டும் என்பதே எமது வேணவாவாகும்.

*– பேராசிரியர். சு. வித்தியானந்தன்*
*நினைவு அறக்கட்டளையினர்.*

# கலையின் அன்பன், கலைஞரின் நண்பன்

சென்ற நூற்றாண்டில் எம்முடன் வாழ்ந்த ஒரு வியத்தகு வித்தியாசமான மனிதனைப் பற்றிப் பேசுவதில் ஆனந்தமும் ஆத்ம திருப்தியும் அடைகிறேன். இந்தச் சிறிய சொற்பொழிவுக்குக் **கலையின் அன்பன், கலைஞரின் நண்பன்** என்ற தலைப்புச் சூட்டியிருக்கிறேன். கலையின் அன்பன் என்பது கவிஞர் முருகையனின் பாடலில் இருந்து எடுக்கப்பட்டது.[1]

'வாழ்க்கை எல்லாம்
கல்வியினால் மகிழ்ச்சி கண்ட
கலையின் அன்பன்'

அவர் வெறும் கலையின் அன்பனாக இராமல், கலைஞரின் நண்பனாகவும் இருந்ததனாலேதான் 'வித்தி' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர், ஆயிரக்கணக்கானோர் உள்ளத்திலும், நமது நாட்டின் கலைக் கல்வி உலகின் சரித்திரத்திலும் நிரந்தர இடம் பெற்றுள்ளார்; பல குடும்பங்களுக்கு உறவினர் போலானார்.

இந்தச் சொற்பொழிவுக்கு ஒர் உபதலைப்புத் தருவதானால் **'வித்தி அண்ணர்'** என்று கூறுவேன்.

பேராசிரியர் வித்தியானந்தன் பற்றிப் பலர் எழுதி விட்டார்கள். அவை சிலவற்றிலுள்ள சில செய்திகளையும் கருத்துக்களையும் நான் இந்த உரையில் எடுத்துக் காட்டுகிறேன். அவற்றை உசாத்துணை நூல்களாகவே தருகிறேன். செய்திக்குச் செய்தி மேற்கோள்களாக உரைத்தால் எனது பேச்சின் தொடர்பு அறுபடும்.

எனக்கு வித்தி அண்ணருடன் பல விதங்களில் 37 வருடத் தொடர்பு. சில வேளைகளில் அந்தத் தொடர்பு மிகவும் நெருக்கமாக இருந்திருக்கின்றது. அவருடனான எனது ஒரு சில அனுபவங்களையும் இன்று உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். அவற்றை நான் உங்களுக்குக் கூறும் போது, நீதிமன்றங்களில் சத்தியப்பிரமாணம் செய் வது போல் "இது உண்மை, முற்றிலும் உண்மை. உண்மையன்றி வேறு ஒன்றும் இல்லை." என்ற மனச்சாட்சி யுடன் கூறுகிறேன். நான் யாழ்ப்பாணக் கோடுகளிலே நான்கு வருடங்கள் சாட்சி சொன்னவன். அதிலே இரண்டு வருடங்கள் சட்ட வைத்திய அதிகாரியாக. எனது சாட்சி வார்த்தைகளால் ஒரு மனிதனின் உயிரும் வாழ்வும் பாதிக்கப்படும் என்பதை நான் உணர்ந்தவன். வித்தி அண்ணாவின், நண்பர் வித்தியின், துணைவேந்தர் வித்தியின், மாமனிதன் வித்தியின் உயிரும் வாழ்வும் ஒரு மனிதன் சம்பந்தமானவ அல்ல. அவை எல்லார்க்கும் உரியன. அவர் எமது கலாசாரத்தின் முதுசம்.

1971 ஆம் ஆண்டு கவிஞர் கந்தவனம் 'வித்தியானந்த மாலை' என்ற ஒரு குட்டி நூலை வெளியிட்டார்.[2] 1971ஆம் வருடம் வித்தியின் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஒரு வருடம்; அவர் தனது பல்கலைக்கழகச் சேவையில் 25 வருடங்கள் பூர்த்தி செய்திருந்தார். அப்போது அவர் பேராசிரியராகப் பதவியில் உயர்வு பெற்றிருந்தார். கவிஞர் கந்தவனம் அந்த நூலை "அப்போது எங்கும் கலாநிதி வித்தியானந்தன் என்பதே பேச்சு" என்று ஆரம்பிக்கின்றார்.

ஆமாம் 1971இல் ஒரு சினிமா சுப்பர் ஸ்டாருக்கிருக்கும் இமேஜும், கிராமியக் கூத்திலே ராஜாவுக்கிருக்கும் கம்பீர மிடுக்கும் அவருக்கு இருந்தன.

1984இல் குறிப்பிடவேண்டிய நூல்களும், கட்டுரைகளும் அவரைப்பற்றி வெளிவந்தன. சில ஒரே நேரத்தில் தோன்றின, 1924 ஆம் வருடம் மே மாதம் எட்டாம் திகதி பிறந்த வித்தியானந்தனின் 60ஆவது ஆண்டு விழா அந்த மாதம் கொண்டாடப்பட்டது. அவர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்து (1977) ஏழு ஆண்டுகள். துணை வேந்தராகி (1979) ஐந்து ஆண்டுகள். அப்போது வெளிவந்த நூல்களில் மிகவும் பிரயோசனமான நூல் அ.சண்முகதாஸ் எழுதிய **"துணைவேந்தர் வித்தி"** என்ற நூல்.[2] அது மிகவும் பொருத்த மான ஒருவரால், பொருத்தமான நடையில், பல தகவல் களுடன் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய பொறுப்புடன் எழுதப்பட்ட இன்னும் ஒரு நூல் விரிவுரையாளர் வித்தியின் ஆரம்பகால மாணவரான த.சண்முகசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட **'கலை மகிழ் நன் பேராசிரியர் வித்தியானந்த னின் வாழ்க்கைப்பணி'** என்பது ஆகும்.[3] பல கோணங்களில் பேராசிரியரைப் பற்றிய கட்டுரைகள் அடங்கிய ஒரு மணி விழா மலர், கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்களால் வெளியிடப்பட்டது.[4] அதில் நானும் ஒரு கட்டுரை எழுதியி ருந்தேன். 1989 ஆம் வருடம் பேராசிரியர் வித்தியானந்தன் இறந்த ஆண்டு. அந்த ஆண்டு ஆ.வேலுப்பிள்ளை நினைவுப் பேருரை ஒன்றைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்தியி ருந்தார். அந்தப் பேருரைக்குப் **'பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலம்'** என்ற தலைப் பைக் கொடுத்திருந்தார்.[5] அந்தப் பேருரை அ. சண்முகதாஸின் 'துணைவேந்தர் வித்தி' என்ற நூலை உசாத்துணையாகக் கொண்டுள்ளது. ஆனால், ஆ.வேலுப்பிள்ளையின் பார்வையில் பல கருத்துக்களைத் தாங்கியுள்ளது. இந்த நூல்களைப் படிக்கும்போது அவற்றிலிருந்த சத்தியத்தை என்னால் உணர முடிந்தது.

வித்தியானந்தன் என்ற மனிதன் எத்துணை அளவிற்கு மற்றவர் சிந்தனையை, உள்ளத்தை, வாழ்வைக் கவர்ந்திழுக்கிறார் என்பதை உணர்ந்தேன். எழுதியவர்களும் பெரியவர்கள் தான், அறிஞர்கள், ஆனால், வித்தியானந் தனின் மாணவரும் நண்பரும் ஆவர். அந்த அருமையான அடைமொழிகளில் சில பின்வருமாறு:

★ விந்தையில் சிறந்த வித்தியானந்தன். (ம.மு.உவய்ஸ்)
★ பேராசான் வித்தி ஒரு ஸ்தாபனம், தனிநபர் அல்லர். ஒரு பொதுச்சொத்து. (R.சிவகுருநாதன்)
★ வித்தி - இத்தகைய பிரபல்யம் வாய்ந்த பெயர் ஈழத்தில் முன்னெப்போதும் இருந்ததில்லை. (அ. சண்முகதாஸ்)
★ சிறியவரைப் பெரியாராக்குவதிலும், மெலியாரை வலி யோராக்குவதிலும் வல்லவர் சு.வி அவர்கள். (கந்தவனம்)
★ நாட்டுக்கூத்தின் நன்னயக் காவலர். (கந்தவனம்)
★ ஒற்றுமை வளர்க்கும் உயரிய சான்றோர். (கந்தவனம்)
★ எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம், நாமெல்லாம் ஒரு தாய் மக்கள் என்னும் உயரிய இலட்சியம் அவரிடம் அச்சாணியாகப் பதித்துள்ளது. (S.M ஹனிபா)
★ அவர் அஞ்சாத தமிழ் மறவனாக உலாவி வந்தவர். (ஜெபநேசன்)
★ வித்தியானந்தன் தமிழ்க்குலத்தின் நிதியமன்றோ! (பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை)

இப்படியான மனிதர் ஒரு தலைமுறையில் ஒரு சிலரே தோன்றுகின்றனர். அவர்கள் முற்பிறப்பிலும் உயர்ந்தவர் களாக இருந்திருக்கவேண்டும். முற்பிறப்பை எமக்கு அறிய வழியில்லை. ஆனால், வித்தியின் இப்பிறப்பு ஒரு தெய்வ சிந்தனையும் கல்வியில் நாட்டமும் உள்ள ஒரு குடும்பத்

தில் என்று தெரியும். அவருடைய தகப்பன் அந்தக் காலத்திலேயே பிரபல சட்டத்தரணியாக இருந்தவர். தெல்லிப்பளையில் அவர்கள் குடும்பம் பராம்பரியப் பெயர் பெற்றது. அந்தப் பெயர் கோவில் திருப்பணி, வறியோருக்கு அன்னதானம், தாராளமான உபசரிப்பு, விருந்துபசாரம் ஆகியவற்றினால் வந்தது. 'அவரது பெரிய தகப்பனார் விவாகம் செய்த வழியில் நாவலர் பரம்பரையுடனும் வித்தியானந்தன் தொடர்பு கொண்டவரெனலாம்' என்று வேலுப்பிள்ளை அவரது நினைவுப் பேருரையில் கூறுகிறார்.[5] ஆகவே, பிற்காலத்தில் சரித்திரம் படைத்த இந்த மனிதனுக்கு ஒரு சரித்திரத் தொடர்பும் உண்டு.

வித்தியுடன் உடன் பிறந்தவர்கள் 11பேர். இவர் இரண்டாவது. அந்தப் பெரிய குடும்பம் தரும் பட்சம், பாசம் அரவணைப்பு, கலகலப்பு, குதூகலம் அவருக்கு இயற்கையாகவே அமைந்துள்ளன. பலரைப் பின்பு அரவணைக்கவும் தனது குடும்பம் தனிக்குடும்பமும் அல்ல, கூட்டுக் குடும்பமும் அல்ல, வரையறையில்லாத ஒரு குடும்பம் என்ற முறையில் வாழ இதுதான் அத்திவாரம். அவருக்குச் சில வருடங்களுக்குப் பின் உபவேந்தராக வந்த பொ.பாலசுந்தரம்பிள்ளை யும் 12 பேருடன் உடன் பிறந்தவர். அவரிடமும் யாரைக் கண்டாலும் முதன்முதலில் அதே முகமலர்வையும் அகத் தழுவலையும் நாம் காண முடிந்தது.

வேலுப்பிள்ளை வித்தியானந்தனுடன் தனது 37 வருடகால (1952-1989) தொடர்பை வைத்துத் தனது பேருரையில் பின்வருமாறு கூறுகிறார். 'இவரை நினைவு கூருவது சிரமம் அல்ல. மறப்பதுதான் சிரமம்.' எனக்கும் அதேபோல் வித்தி அண்ணாவுடன் (1952-1989) 37 வருடத் தொடர்பு உண்டு. என்னைப் பொறுத்த வரையில் என் நினைவு இருக்கும்

வரையில் அவர் மறக்கமுடியாத ஒருவர். கண்டிப் பாக உங்களில் அநேகமானோருக்கும் அவருடன் தொடர்பு நினைவுத் தொடர்பாகவே இருக்கும்.

வித்தி அவர்களும் என்மேல் பரஸ்பர நம்பிக்கை வைத்திருந்தார். 1988 ஆம் ஆண்டு எனது 60வது ஆண்டு விழாவில் வெளியிட்ட 'நந்தி' என்ற நூலில் பின்வருமாறு எழுதினார்.[6]

'நந்திக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டது. நான் பேராதனையிலே தமிழ் விரிவுரையாள ராகக் கடமையாற்றிய போது, நந்தி குருநாகலிலும் நாவலப் பிட்டியிலும் மருத்துவ அதிகாரியாகத் தொழில் செய்து கொண்டிருந்தார். அப்போது அவரது சிறிய தகப்பனும் எனது ஆசானுமாகிய பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள் வீட்டிற் சந்திப்போம். பல கூட்டங்களிலும் சந்தித்து உரையாடுவதுண்டு. நாவலப்பிட்டியில் எனது மனைவியின் சகோதரி குடும்பத்துடனும் ஆத்மஜோதி முத்தையா அவர்களுடனும் இருந்த தொடர்பு எங்களை இறுக இணைத் தன. அவர் எங்கள் குடும்பங்களின் நெருங்கிய நண்பராக அன்றிலிருந்து இன்று வரை விளங்கி வருகிறார்'.

'பேராசிரியர் என்ற முறையில் எனக்கு ஒத்தாசையும் ஆதரவும் நல்கி வருகின்றார். பல தடவை நான் வெளிநாடு சென்றபோது பதில் துணைவேந்தராகக் கடமையாற்றியி ருக்கின்றார்; நம்பிக்கையின் திருவுருவாக விளங்குகிறார்.

அவரின் ஒத்துழைப்புக்கும் ஆலோசனைகளுக்கும் ஆதரவு களுக்கும் வாரப்பாட்டிற்கும் நான் அவருக்குப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். 'ஏறுவதற்குத் துணையாகவுள்ள

ஏணியை,' ஏறியதும் தள்ளி விடுபவர்கள் போலல்லாது விசுவாசமாக நடந்து வருகிறார்'. இந்தக் கடைசி வசனம் முக்கியமாக கைலாசபதியைக் குறிக்கும் என்பதை பின்னால் விளக்குகிறேன்.

வித்தி என்னிலும் பார்க்க 4 வயதுதான் மூத்தவர் (1924, 1928). ஆனால், பல வருடங்களுக்கு மூத்தவர் போன்ற ஒரு இடைவெளியை அவரது ஆளுமை, அந்தஸ்து, பதவிகள் பரவலான பெயர் உண்டாக்கிவிட்டன. அவருடைய மாணவர்களாக இருந்த சிவத்தம்பியும் கைலாசபதியும் 8-9 வயதுகளுக்கு மட்டும் இளையவர்கள். அவருக்குப் பல வருடங்கள் மூத்த அவரது உறவினர் அவரை அண்ணர் என்றும் அத்தான் என்றும் அழைப்பதை அவதானித்திருக்கி றேன். இதற்குக் காரணம் உண்டு.

வித்தியானந்தன் மிகவும் இளைய வயதிலேயே பல்கலைக் கழகம் புகுந்து பட்டம்பெற்று வெளிநாடு சென்று கலாநிதி யாகி நாடு திரும்பி விரிவுரையாளர் ஆனவர். அவர் பல் கலைக்கழகம் புகும்போது அவருக்கு வயது 17. கலாநிதிப் பட்டத்துடன் வந்து விரிவுரையாளரான போது 26 வயது. 17 வயதில் மாணவனாகத் தொடங்கிய பல்கலைக்கழக வாழ்வு 65 வயது எட்டும்போது பேராசிரியராக, உப வேந்தராக முடிவுற்றது (1941-1989) 48 வருடகால உயர் கல்வி ஸ்தாபனத் தொடர்பு.

அந்தத் தொடர்பில் அவர் உருவாக்கின மாணவர்கள் தங்கள் காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற கல்விமான்களாகவும் தமிழ் அறிஞராகவும் ஆனார்கள். ஒரு சிலரின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகிறேன். கிட்டத்தட்டக் கால வரிசையில்: த.சண்முகசுந்தரம், ஜனாப்

எ.்.ப்.எம். உவய்ஸ், **ஆ.சதா சிவம்**, ச.தனஞ்செயராஜ சிங்கம், **க. கைலாசபதி, க. சிவத் தம்பி, ஆ.வேலுப் பிள்ளை, சி.தில்லைநாதன், பொ.பூலோக சிங்கம், அ.சண்முகதாஸ்,** ஞானா குலேந்திரன், மனோன்மணி சண்முகதாஸ், **வ.ஆறுமுகம், இ.பாலசுந்தரம்,** நா. சுப்பிர **மணியம்,** திருமதி சந்திரலேகா வாமதேவா, **க.சிற்றம் பலம், எஸ். சிவலிங்கராசா,** எஸ். செபநேசன், **சி.மௌன குரு,** திருநாவுக்கரசு கமலநாதன், **க.அருணாசலம்,** துரை. மனோகரன். ஒரு சில பெயர்கள் மட்டும் தந்திருக்கிறேன். இவர்களில் 14 பேர்கள் பேராசிரியர் கள். நமது நாட்டில், ஏதோ ஒரு விதத்தில் தமக்கென்று ஓர் இடம் பிடித்தவர்கள். அவரின் மாணவர்களான இந்தப் பேராசிரியர்களுக்கும் இப்படியான எத்தனை மாணவர்கள் பேராசிரியர்ப் பதவி பெற்றனர்.

### எழுத்தாளர் பண்ணை

பேராசிரியர் வித்தியைத் தமது தமிழ்ப் பேராசிரியர் என்று பெருமைப்படும் ஒரு பிரபல்யமான எழுத்தாளர் வரிசை உண்டு; 'செங்கையாழியான்' குணராசா, செம்பியன் செல்வன், ராஜகோபால், செ.யோகநாதன், 'குந்தலை' சடாட்சரதேவி, 'துருவன்' பரராஜசிங்கம், 'அங்கையன்', கைலைநாதன் இப்படியாக.

வித்தி பழமைக்கும் புதுமைக்கும் பாலம் வகுத்தவர். செங்கை ஆழியான் பின்வருமாறு அதை எடுத்துக் கூறுகிறார்: 'வித்தி நவீன இலக்கியத்தைச் சரியாகப் புரிந்து கொண்ட பேராசிரியர் மரபில் வளர்ந்தவர். மரபு தெரிந்தவர் தான் அதை மீறமுடியும் எனக் கூறியவர்'[7].

வித்திக்கும் நல்ல ஆசிரியர்கள் இருந்தார்கள் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வ நாயகம். இவர்களில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையை வித்தி 'என்னை ஆளாக்கிய பெருமகன்' என்றும் 'எனது குரு' என்றும் போற்றியிருக்கிறார். கணபதிப்பிள்ளை மிகவும் மதி நுட்பம் பெற்றவர், புது முறைச் சிந்தனையாளர், பரந்த மனமுள்ள நல்லாசிரியர். அவரது இந்தத் தகைமைகள் இளம் வித்தியானந்தனை வளர்த்தன; மெருகூட்ட வைத்தன என்பதில் சந்தேக மில்லை.'என்னை ஆளாக்கிய பெருமகன்' என்று மாணவனே கூறியபோது வேறு எந்த விதக் கேள்விக்கும் இடம் இல்லை. அதே வேளையில் செல்வநாயகத்தின் ஆளுமை வெறும் பிளாஸ்றிக் அல்ல, அது காந்தம் கொண்ட இரும்பு. பிற்காலத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் போற்றத்தக்க பல்கலைக்கழகத் துணைவேந்தராகக் கோலோச்சுவதற்குச் செல்வநாயகத்தின் ஒழுக்கக் கட்டுப்பாட்டின் நிர்வாகப் பக்குவமும் காரணம் என்பதை நாம் உணரவேண்டும். முக்கியமாகச் செல்வநாயகம் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராவும் இருந்த அந்தக் காலம் (1965-1970) ஆறு வருடங்கள் வித்திக்கு முக்கியமான காலம். வேலுப்பிள்ளை அந்தக் காலத்தை 'வித்தியானந்தனுடைய செல்வாக்கு மிகக் குறைவாகக் காணப்பட்ட காலம்' என்று கூறலாம் என்கிறார்.[5] 'செல்வாக்கு' என்பது நாம் பார்க்கும் நோக்கைப் பொறுத்தது. பதவி, பேர், பிரபல்யம் என்று பார்த்தால் சில செல்வாக்குகள் செல்லாக் காசுகளாகலாம். ஆனால், அந்தக்காலம் அவரது எதிர்கால நிர்வாக ஆளுமையை ஒரு ஸ்திர நிலைக்குக் கொண்டு வந்த

காலம் என்றே கொள்ளல்வேண்டும். செல்வநாயகத்தின் அந்தக் குறுகிய காலக் கட்டுப்பாட்டுப் பயிற்சி வித்தியானந்த னுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்தது.

இவ்வேளையில், செல்வநாயகம் பற்றிச் சில வார்த்தைகள் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். ஏனெனில், செல்வநாயகம் மூலம்தான் வித்தியானந்தனை நான் அறிந்தேன். அவர் மூலம்தான் 1952ஆம் வருடத்திலிருந்தே பல்கலைக்கழகத்தில் தமிழ் படித்தவர்களுடன் கிட்டப் பழகும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

செல்வநாயகம் என்னுடைய சிறிய தகப்பனார். அவரைப் பற்றி நினைக்கும்போது எனக்கு அவர்மேல் அனுதாபம் தான் ஏற்படுவது உண்டு. தமிழ் அறிவையும், ஆர்வத்தை யும், கற்பிக்கும் ஆற்றலையும், ஆய்வின் நிதானத்தையும் பொறுத்தவரை அவர் எந்தத் தமிழ்ப் பேராசிரியருக்கும் குறைந்தவர் அல்லர். ஆனால், அவருக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரத்தை அவரது மாணவரோ பல்கலைக் கழக சமூகமோ கொடுத்ததாகத் தெரியவில்லை. அது வேறு யாருடைய குற்றமும் இல்லை. அவர் தானாக சம்பாதித்தது ஒரு வெறுமையும் வறுமையும் தான். உள்ளத் தில் நல்லவை இருக்கும் போது கூடச் சொல்லால் பொல்லா ததாக வெளிப்படுவதை அவர் ஒரு கலையாக வளர்த்துக் கொண்டார். சில வேளைகளில் அவருடைய சிக்கனமான நக்கல் ஒருவரை உருக்குலைய வைப்பதாக இருக்கும். அவர் என்னை மிக மிக நேசித்தார்; வேண்டிய நேரத்தில் உதவிகள் செய்தார். ஆனால், சில சந்தர்ப்பங்களில் அவரது சில வார்த்தைகள் என்னை மிகவும் பாதித்தன. எனது இளம் வயதில் என்னைப் புத்தியில் மந்தமானவன் என்று எனது தந்தைக்கு, அதாவது அவரது தமையனுக்கு எழுதியிருக்கிறார். நான் சிறுகதை எழுதிய காலத்தில்

எனக்குச் சிறுகதை எழுத வராது என்று எனக்கு நேரிலே கூறியிருக் கிறார். இப்படி எத்தனையோ.

நான் உள்வீட்டுப்பிள்ளை. சிற்றப்பாவிடம் அடி வாங்கியதாக இவற்றை ஏற்றுக்கொண்டேன். ஆனால், நானும் அவற்றை மறக்கவில்லை. மற்றவர்கள் இப்படியான அசம்பாவித சந்தர்ப்பங்களை எப்படி மறப்பார்கள்? மன்னிப்பார்கள்? செல்வநாயகத்தின் இந்தப் பலவீனத்தைச் சிலர் நல்ல முறையில் பயன்படுத்தினர். அதில் ஒருவர் சகவிரிவுரை யாளர் ஆ.சதாசிவம்.

பொதுவாக, பரவலாகச் செல்வநாயகமும் வித்தியானந்த னும் இரு மாறான கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்பது, எதிரிகள் என்பதும் செய்தியாக நிலைத்து வருகின்றன. இதற்கு முக்கிய காரணம் ஆ.சதாசிவம். ஆனால், அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு ஒருவர் கரிசனையும், மதிப்பும் வைத்திருந்தார்கள். இரு குடும்பங்களும் உறவினர் போல. செல்வநாயகத்தின் மனைவி கமலாம்பிகை. வித்தியின் மனைவி கமலாதேவி. இரு மனைவிமாரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது சூரியனை வரவேற்கும் இரு கமலங்கள் போல முகம் மலர்வார்கள். அவர்கள் பிள்ளைகள் சகோதரர் போல் ஒன்று கூடுவார்கள்.

அந்தக் காலத்தில் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி க்குப் போட்டி என்றால் பரபரப்பான, சம்பந்தப்பட்டவர்களின லும் பார்க்க அவர்களைச் சார்ந்தவர்களினது மனங்களைச் சில காலம் உலுக்க வைக்கும் நிகழ்வாகும் அது. ஏனென் றால், இப்போது போல் அல்லாமல் ஒருவருக்கு ஒருத்தி என்ற தாம்பத்தியக் கட்டுப்பாடுபோல் ஒரு துறைக்கு ஒரு

பேராசிரியர்தான் இருக்கமுடியும். வயதில் குறைந்த ஒருவர் பேராசிரியரானால் மற்றவர்கள் வாழ்நாள் விரிவுரை யாளர்களாகவே இருந்து போகவேண்டும். இந்த நிலையில், 1965 ஆம் வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை பேராசிரியர்ப் பதவிக்குப் போட்டி நடந்தது. போட்டி யிட்டவர்கள் வி.செல்வநாயகம், 58 வயது (23 வருட அநுபவம்), சு.வித்தியானந்தன் 41 வயது (19வருட அநுபவம்), ஆ.சதாசிவம், 39 வயது (13வருட அநுபவம்), சு.வியும் ஆ.சவும் செல்வநாயகத்தின் மாணவர். ஆ.ச. என்பவர் சு.வியின் மாணவர் கூட.

அப்போது, என்னைக்காண வித்தி விரும்புவதாக ஒரு மாணவன் வந்து கூறினான். நான் அவர்கள் வீட்டிற்குப் போனபோது அவர் இல்லை. மனைவி கமலாதான் இருந்தா. அவர் கூறினார் "நந்தி மாமா, (அவர் பிள்ளைகள் அப்படித் தான் அழைப்பார்கள்) இந்த 'புரொபஸர்' போட்டி விஷயமாகத்தான் பேச அழைத்தார்" என்றா. அவ மேலும் கூறினா "மிஸ்ரர் செல்வநாயகத்துடன் போட்டி போட இவருக்கு விருப்பமில்லை. பெரியவருக்குக் கிடைத்தால் எங்களுக்குச் சந்தோஷம். ஆனால், சதாசிவம் ஓடித்திரியுது. சதாசிவத்துக்குக் கிடைத்தால் ஒரு நாளும் இவருக்கு கிடையாது."

இந்த நிலையில் சதாசிவம் செல்வநாயகம் வீட்டிற்கு ஒரு இராப் போசனத்துக்கு வந்திருந்தார். அதில் நானும் கலந்து கொண்டேன். போசனத்திற்கு முன் சதாசிவம் கூறினார். "பேராசிரியர் பதவி எனக்குத் தான் கிடைக்கும். உங்களு க்கு Ph.D இல்லை. உங்களை இன்ரவியூற்கு அழைக்கவும் மாட்டார்கள். வித்தி Second Class. நான் First Class.

அத்துடன், வித்தி பற்றிய சில அவதூறான விடயங்களை எழுதி அவற்றை யூனிவேசிற்றிக்கு அனுப்பப்போகின்றேன். எழுதிக்கொண்டு வந்ததைப் படித்துக் காட்டினார். "இதைப் படிச்சால் வித்திக்கு ஒரு காலமும் துறைத்தலைவர் பதவி கிடைக்காது" என்றார். செல்வநாயகம் கேட்டுக்கொண்டி ருந்தவர் எழுந்துவிட்டார். "இதை நீ அனுப்பினால் உன்னைப் பற்றி இன்னும் கூடுதலாக நான் எழுதி அனுப்பு வேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இராப்போசனத்தி ற்குச் செல்வநாயகம் எங்களுடன் சேரவில்லை. அதுதான் செல்வ நாயகம்! செல்வநாயகம் பேராசிரியரானார்.

பல்கலைக்கழகமானாலும் சரி, அரசஅலுவலகமானாலும் சரி ஒரு குடும்பமாகப் புரிந்துணர்வுடன் இயங்கவேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சியுடன் முன்னேற்றம் காணலாம். கோள் மூட்டும் ஒருவர் அதில் இருப்பின் அந்த நிலையை அடைய முடியாது. ஏறத்தாழ அதே காலகட்டத்தில்தான் சதாசிவம் 'இழிசினர் வழக்கு' என்ற கோட்பாட்டைப் பிரபல்யப்படுத்தி, அது இழிசனர் எனத் திரிபுபட்டு, எழுத்தாளர் கழகங்கள் இழுபறிப்பட்டு அடிபட்டு உடை பட்டன. அது சதாசிவத்தின் வேறுமுகம்.

1971 ஆம் ஆண்டு செல்வநாயகம் ஓய்வு பெற மீண்டும் பேராசிரியர் பதவிக்குப் போட்டி நடைபெற்றது. இந்த முறை கொழும்பில் ஏற்கெனவே பேராசிரியராக இருந்த சதா சிவமும் கைலாசபதியும் வித்தியானந்தனுடன் போட்டி யிட்டனர். கைலாசபதிக்குப் பல்கலைக்கழக ஆசிரிய சேவை யில் 10 ஆண்டுகள் கூட நிரம்பவில்லை.

'கைலாசபதி வித்தியானந்தனுடன் போட்டியிடுகின்றாரா? என்று அக்காலத்தில் மூக்கின் மேல் விரலை வைத்தவர்கள்

பலர்' என்று வேலுப்பிள்ளை தனது பேருரையில் கூறுகின்றார்.[5] உண்மையில் மூக்கின் மேலல்ல, வித்தியானந்தன் கைலாசபதிக்குச் செய்தவற்றை அறிந்தவர்கள் தங்கள் இதயத்தின் மேல்தான் கையை வைத்தார்கள். வித்தி இது பற்றி இரு தரம் என்னிடம் கூறினார். இரண்டாம் தரம் கூறும் போது அவர் கண்கள் கலங்கின. பேராசிரியர் தேர்வுக்கு இருவரும் போயிருக்கிறார்கள். "He did not even look at my face" என்று கூறினார் வித்தி. அதை அவர் எதிர்பார்த்திருக்கவேண்டும். எந்த முகத்துடன் கைலாசபதி அவரைப் பார்க்கமுடியும்? வித்தி கைலாசபதிக்கு ஏறுவதற்கு ஏணியாக மட்டுமல்ல, சில வேளைகளில் செயற்கைச் சுவாசம் கொடுக்கும் இயந்திரமாவும் இருந்திருக்கிறார். அப்படி இருந்தும்... இப்படி நடந்தது. வித்தி அவர்கள் இந்த நிகழ்வைக் கூறும்போது As you like it இல் ஷேக்ஸ்பியரின் கவிதை அடிகளின் அர்த்தம் எனக்கு நன்றாக விளங்கின.

Blow blow thou winter wind
Thou art not so unkind
As Man's ungratitude

'வீசு வீசு பனிக்காற்றே
மனிதனின் செய்நந்நன்றி கொல்லலிலும் பார்க்க
நீ அன்பில்லாதவன் அல்ல-என்பதாகும்.'

ஒப்பியல் இலக்கியத்தில் பல சாதனைகள் செய்த கைலாசபதியின் சரித்திரத்தில் இது ஒரு கரும்புள்ளிதான். இம்முறை வித்தியானந்தன் பேராசிரியர் ஆனார்.

பேராதனையில் வித்தியின் காலம் நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், ஒரு உன்னதமான மாணவ பரம்பரை தோன்றிய

காலம். நாட்டுக்கூத்து மறுபிறவி எடுத்தகாலம். கலைஞர்கள் தலை நிமிர்ந்து நடை போட்ட காலம்.

இப்போதைய நிலையில் அவரைப்பற்றி அவரது பிரசித்தி பெற்ற மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். இந்தச் சொற்பொழிவுக்காக ஏழு பேரை நேரடியாகச் சந்தித்தேன். ஒவ்வொருவரையும் தொலை பேசியில் தொடர்பு கொண்டேன். வித்தி பற்றிச் சுருக்கமாக இரண்டு வசனங்கள் கூறுங்கள் என்றேன். இது மிகவும் சுருக்கமான பேட்டிதான். ஆனால், தந்தி பாஷையில் அவர்கள் கூறியன பின்வருமாறு:

★ வித்தியானந்தன் வாழ்நாள் முழுவதையும் தனது பணியைத் தமிழ் மக்களின் கல்விக்கும் கலைகளுக்கும் அர்ப்பணித்தவர். (பொ.பாலசுந்தரம்பிள்ளை)

★ அவர் தமிழ் அறிஞராக இருந்தது மட்டுமல்ல, தமிழ் மக்களுடைய தேசிய உணர்வைக் கட்டி எழுப்புவதிலும் தமிழ் மக்களுடைய அபிலாசைகளை முன்னெடுத்துச் செல்வதிலும் தனியான ஒரு இடத்தை வகித்தவருமாவார். (எஸ்.கே.சிற்றம்பலம்)

★ நல்லாசான், தமிழ் ஆர்வலர், நட்பு மிகுந்தவர், மனித நேயம் படைத்தவர். (என். பாலகிருஷ்ணன்)

★ பண்டைத்தமிழ் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் கற்பதை வேம்பாகக் கருதிய பல மாணவர்கள், பேராசிரியர் வித்தியிடம் அவற்றைக் கற்ற பின்னர்தான் அவை சுவை மிக்கவை என்று உணர்ந்தனர். (சந்திரசேகரம்)

★ இலங்கைப் பல்கலைக்கழகமும் யாழ். பல்கலைக்கழக மும் திரும்பிப் பார்த்துப் பெருமைப்படத்தக்க பல சாதனை களை நிலை நாட்டியவர். மற்றோருக்கு உதவி செய்வதில்

பெரும் மகிழ்ச்சி கண்ட ஒரு மகோன்னதமான மனிதாபிமானி. (சி.தில்லைநாதன்)

★ தமிழ் பயிற்றுவது என்பது அவருக்குப் பண்பாட்டுப் பயிற்சி. அத்துடன், அவர் ஆசிரியர், மாணவர் வேற்றுமை பேணாத ஒருவர் (மனோன்மணி சண்முகதாஸ்)

★ இலங்கையின் தமிழியலுக்கு அவரது அழியாத சேவை அரங்கியலுக்கு அவர் செய்த பணிதான். அதன் மீள் கண்டறிதலும் அதனைப் பல்லைக்கழக மாணவருக்கு அவர் கற்பித்த முறையும் குறிப்பிடத்தக்கன. மனிதன் என்ற முறையில், He was a great Human beeing. (K.சிவத்தம்பி)

★ வித்தி ஈழத்துக் கூத்தியல் ஆய்வின் பிதாமகன், விழிம்பு நிலை தமிழரின் கலைகளையும் தமிழ்க் கலைகள் எனக் காட்டிய முன்னோடி. (சி.மௌனகுரு)

இந்த வார்த்தைகள் அவரது பன்முக ஆளுமையையும், கலை உணர்வின் வேட்கையையும் நட்பின் ஆத்ம நிலையையும், மனிதபிமானத்தின் பேரழகையும் எடுத்துக் காட்டுகி ன்றனவாக உள்ளன.

'வித்தியானந்தன் கலைகளின் அன்பன். கலைஞரின் நண்பர். அவரது குடும்பம் ஒரு கலைக்குடும்பம்' என்று கலையரசு சொர்ணலிங்கம் வர்ணித்தார்.[1] கலைஞர்களை முக்கியமாக நாட்டார் கூத்துச் சம்பந்தமானவரை அவர் தேடி அலைந்து, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, சிலாபம், மன்னார், மலைநாடு என்றெல்லாம் சென்று அழைத்து வந்து பல்கலைக்கழக அரங்கில் மேடை ஏற்றி நாட்டார் கூத்துக்கு மீட்புப் பணி செய்ததை வேலுப்பிள்ளையும்,[5] சிவத்தம்பியும் அவரது தமிழ்ப்பணி என்றும், அழியாத சேவை என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பணியில் அவரது இல்லம் என்றும் கலைஞருக்குத் திறந்திருந்தது. அதன் இல்லத்தரசி

கமலாதேவி வித்தியானந்தன். வித்தியானந்தன் வாழ்வில் அவர் ஒரு சக்தியாகவும் சரஸ்வதியாகவும் இருந்தார் என்று சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

1978 ஆம் ஆண்டும் அதன் பின்பு 10 ஆண்டுகளும் வித்தியானந்தனைச் சரித்திரத்தில் நிலைநாட்டிய உன்னத காலம். அவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராகக் கடமையாற்றினார். ஒரு துணைவேந்த ராக முழுநிலை நியமனம் முதலாவது பெற்ற இலங்கைத் தமிழர் வித்திதான். அதே காலம் அவருடன் பணியாற்றக் கிடைத்தது எனது பாக்கியம் என்று கருதுகிறேன். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் அவரது சிந்தனையினதும் துணிவினதும் தன்னம்பிக்கையினதும் குழந்தையாகும். வித்தி மற்றவர்களது, குறிப்பாகத் தமிழர் அல்லாத மற்றவர் களது ஒத்துழைப்பைப் பெறுவதில் மகாவல்லவர்.

அவர் துணைவேந்தராக இருந்தபோது கொழும்பு சென்று பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அதிகாரிகளிட மிருந்து, மௌனமாக எந்தவித ஆர்ப்பாட்டமும் இன்றிப் பல்கலைக்கழகத்திற்கு வேண்டியதைப் பெற்று வந்த திறமையை நான் நேரில் பார்த்து வியந்த ஒருவன். அதற்கு ஒரு காரணம், மானியக்குழுத் தலைவர் ஸ்டான்லி கல்பகே வித்தி மேல் வைத்திருந்த பெரும் மதிப்பும், நம்பிக்கையும் என்று கூற முடியும். இன்று நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களும் உருவான பீடங்களும் அவர் காலத்திலேயே உருப்பெற்று விட்டன.

வித்தியின் பல்கலைக்கழக நிர்வாகம் நீதியும் நியாயமும் நேர்மையும் கொண்டதாக இருந்தது. அவருடன் பேராசிரியர் தொடக்கம் சிறிய தொழில்கள் பார்ப்போரின் தேர்வுக்

குழுக்கள் வரை பலவற்றில் நான் பணியாற்றியிருக்கிறேன். தகுதி யில்லாத ஒருவரையும் அவர் நியமித்ததில்லை.

துணைவேந்தர் வித்தி யாழ். பல்கலைக்கழகத்திற்கு ஆகாத எதையும் செய்ததில்லை. அவர் துணை வேந்தராகப் பதவி யேற்ற ஒரு வருடத்தில் (1979) அவருடன் 22 வருடங்கள் வாழ்ந்து அவருக்கு உறுதுணையாக இருந்த அவரது மனைவி சடுதியாக இறந்தார். இந்த இழப்பு எந்த அளவு அவரது பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பாதிக்கக்கூடும் என்று நண்பர்கள் கவலையுற்றார்கள். ஆனால், வித்தி தன்னை நல்ல முறையில் திடப்படுத்திக் கொண்டார். நல்லவருக்குத் தெய்வம் துணை என்ற நியமத்தில் அவருக்குப் பதிப்பாளர் ஆகத் தெய்வ பக்தியும் நிர்வாகத் திறனும் உள்ள இருவர் லோகேஸ்வரனும் சிவராசாவும் வாய்த்தனர். அத்துடன், அவருக்கு ஒரு மகள் போன்ற கரிசனையுடன் அலுவலகத்தில் உதவியாளராக (Personal Secretary) இருந்தார் கிரேஸ் பாலச்சந்திரன் என்ற விசுவாசமுள்ள நம்பிக்கையான பெண்மணி. வித்தியின் நிர்வாக அமைதிக்குக் கிரேஸ் பாலச்சந்திரனின் பங்கு கணிசமானது. வித்தியின் பின்வந்த துணைவேந்தர்களுக் கும் அதே பங்களிப்பைக் கிரேஸ் பாலச்சந்திரன் செய்ததை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். மாமனிதன் துரைராசா நோயுற்று இருந்த வேளையிலும் கடமையாற்றினார். கிரேஸ் அவருக்கு வேண்டிய நேரங்களில் அலுவலகத்திலே மருந்துகள் கொடுத்ததை இப்போதைய பதிவாளர் திருமதி என். தங்கராசா மகிழ்ந்து கூறினார்.

வித்தியின் துணைவேந்தர் காலம் பற்றி அவர் காலத்தில் வாழ்ந்த மூத்த உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவர் கூறியதை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். நீதியரசர் கலாநிதி எச்.டபிள்யூ. தம்பையா பின்வருமாறு கூறுகிறார்:

'தமிழ்த் தாய்க்கே தன்னை அர்ப்பணித்துவிட்ட பெரியார் வித்தியானந்தன் மிகச் சிறந்த தமிழ் அறிஞர்.'[2] ஒரு நிர்வாகி என்ற முறையில், அவர் யாழ். பல்கலைக்கழகத்தை உன்னத நிலைக்கு உயர்த்தியுள்ளார். அரசியல், கலா சாரம் என்பன பற்றி வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட வர்கள் பணிபுரிகின்ற பல்கலைக்கழகமொன்றை வெற்றி கரமாக நிர்வகிப்பதற்கு அவரின் புத்தி சாதுர்யமும் அன்பு நடைமுறைகளும்தான் உதவியுள்ளன. அவரது செழுமை யான முகம், திரட்சியான கண்கள், சாத்வீகமான ஆளுமை. ஆனால், ஒரு தமிழ் மன்னனின் தோற்றம், இவைகூட அவரது நிர்வாகத்துக்கு நேர்த்தி தந்தன என்று நான் நம்பு கிறேன். அவர் பட்டுடையுடன் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவுக்கு வரும் காட்சி, சோழ மன்னனின் ஊர்வலம் இப்படி இருந்திருக்குமோ என்று எண்ணி வியக்கவைக்கும்.

வித்தி, இப்போது இருந்திருந்தால் அவருக்கு 80 வயதாக இருக்கும். இப்போதைய அரசியல் நிலையில் மிகவும் வேண்டப்பட்டவராக இருப்பார். பல தரப்பட்ட தமிழரை ஒன்று சேர்க்கக் கூடிய தலைவராக இருப்பார். தமிழ் முஸ்லிம் களை அவர் நேசித்த வகையும், அவர்களுடனான தொடர்பும் வேறு எந்தத் தமிழனுக்கும் இருந்தது இல்லை. **'பிறை யன்பன்'** என்பது அவருக்கு வெறும் புனைபெயர் அல்ல. அது ஒரு சமூகத்துடன் பிணைத்த பெயராகும். அதேபோல் கிறிஸ்தவ தமிழ் அறிஞருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

பிரதேச சிந்தனைகள் தலைதூக்கி நிற்கும் இந்தக் காலத் தில் அவருக்கு ஈழத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள செல்வாக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும்.

சரித்திரம் ஒரு நூதனமான நாடகாசிரியன். உலகப் பெரியோர் பலரின் கடைசி நாள்கள் துன்பியல் நாடகமாக முடிவது அவர்கள் வாழ்க்கையின் நியதி போல் தோன்று கிறது. வித்தியின் கடைசி நாட்கள் அப்படிப்பட்டது. துணை வேந்தர்த் தேர்வு சம்பந்தமான பல்கலைக்கழக கவுன்சில் கூட்டம் நடக்க இருந்த காலையில் ஆயுதம் தாங்கிய நால்வர் அவர் வீட்டிற்குப் போயிருக்கிறார்கள். அவரை அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். அவரது தலைமயிரை இழுத்து முன் மயிரில் ஒரு கற்றையை வெட்டியிருக் கிறார்கள். அவரது இடது கன்னத்தில் அறைந்திருக்கிறார் கள். ஒருவர் தான் கட்டியிருந்த வார்ப்பட்டையை அவிழ்த்து, சுழற்றி, அவரை அடிக்கப்போன வேளையில் அவரின் இரு மகன்மாரும் மன்றாடி அழுதிருக்கிர்கள். அடிக்காமல் போய்விட்டார்கள். இது அவர் எனக்குக் கொழும்பில் கூறிய தகவல்கள். அப்போதும் கண் கலங்கினார். அவரைத் துன்புறுத்தியவர்கள் அவரிடம் போவதற்கு முன் என்னிடம் வந்தார்கள். 'நீரும் வித்தியானந்தனும் சேர்ந்து தமிழ் அரசுக் கட்சியைப் பழையபடி கொண்டு வரப் பார்க்கிறீர்கள். இன்று கவுன்சிலுக்குப் போகப்படாது' என்று எச்சரித்தார்கள். என்னுடன் 'சேர்' போட்டுப் பண்பாகப் பேசினார்கள். ஆனால் வித்திக்கு ஏன் இப்படி செய்தார்கள் என்று தெரியவில்லை. அது இதுவரை மர்மமாகவே இருக்கின்றது. அதனால் வித்தியினுடைய பெருமை எவ்விதத்திலும் இம்மியும் குறையவில்லை. அவருடைய சரித்திரம் எழுதும் போது அந்த நிகழ்வு மகுடமாக இருக்கும். இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கடவுளின் மகனுக்குத் தலையில் முள் வைத்தார்கள், முகத்தில் துப்பினார்கள், கோலால் தலையில் அடித்தார்கள், உடுப்பை உரிந்தார்கள், ஏளனம் செய்தவாறு சிலுவையில் அறைந்தார்கள். பிட்டுக்கு மண் சுமக்க வந்த கூலியும் அரசனால் சவுக்கால் அடிபட்டான்.

அங்கே அடிவாங்கிய இருவரும் கடவுளர். வித்தி வெறும் மனிதன்தானே!.

அந்த நிகழ்வுக்குப் பின் வித்தி யாழ். பல்கலைக்கழகத்து க்கு வரவில்லை. அதன்பின் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அவருடன் நடந்து கொண்ட முறைகள் வெட்கக கேடானவை. அவற்றை இங்கே கூறுவதானால் மேலும் அரைமணி நேரம் வேண்டும். தேவையும் இல்லை. அவரது பூதவுடலைப் பல்கலைக்கழகத்தில் வைத்து அஞ்சலி செய்வதற்கு அவரது பிள்ளைகள் அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு ஒரு தன் மானம் உண்டு.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவாக ஒரு அறக் கட்டளை, அறிவு மிக்க பெரியோர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்படுகின்றது. அதன் செயற்பாடுகள் வித்தியின் பெயரை இளைய தலை முறையினருக்கு ஞாபகம் செய்து கொண்டே இருக்கும். இதே வேளையில் சென்ற ஜனவரி மாதம் கா.சிவத்தம்பியின் தலைமையில் ஒரு அறக் கட்டளை பேராசிரியர் வி.செல்வநாயகம் நினைவாகக் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டும் மிகவும் பொருத் தமான நிகழ்வுகள்.

பேராசிரியரின் வாழ்வு அன்பும், பண்பும், சால்பும், கல்வித் தொடர்பும், கலைத்தேடலும் தமிழியற் சிந்தனையும் கொண்ட சரித்திரம். அந்த வாழ்வு ஒரு தரமான சரிதமாக வெளிவரவேண்டும். வெறும் கட்டுரைத் தொகுப்புக்களாகச் சொன்னதைத் திரும்பிச் சொல்வதாக இராமல் பல தகவல் களையும் சேகரித்து ஒருவரால் எழுதப்படவேண்டும்.

வித்தியானந்தன் நூலகத்தின் முன்றிலில் அவரின் சிலை இருக்கவேண்டும். அல்லாவிடின் நூலகத்திற்கு உள்ளே அவரது நெஞ்சளவு சிலை இருக்கவேண்டும். யாழ். பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை பொன்னம்பலம் இராம நாதனு க்கு அடுத்ததாக நினைவு கூர வேண்டிய பெருமகன்

அவர்தான். இதனை இந்த அறக்கட்டளை நிர்வாகிகள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் சேர்ந்து நிறைவாக்க வேண்டும்.

ஈழத்தின் தமிழ் உலகையும், கலை உலகையும் பொறுத்த வரை இந்த அறக்கட்டளை ஒரு வரப்பிரசாதம்; ஒரு மைல்கல். அதற்கு எனது வாழ்த்துக்கள்!

இந்தச் சொற்பொழிவை ஒரு கவிதையுடன் நிறைவு செய்ய விரும்புகிறேன். முஸ்லிம் கவிஞர் கவிமணி எம்.சி.எம். ஸுபைர் எழுதிய கவிதை:

அழகுத் தமிழரின் காவலராம்
அன்பு ததும்பும் நாவலராம்
பழகப் பழகப் பயன்நல்கும்
பண்பிற் கனிந்த மேலவராம்
பழமை புதுமை இரண்டிற்கும்
பால மாகத் திகழ்பவராம்
இளைஞர் முதியோர் எல்லோர்க்கும்
இனியர் சு.வித்தி யானந்தன்.

**மேற்கோள்கள்:-**


1. அ.சண்முகதாஸ் (1984), துணைவேந்தர் 'வித்தி', தமிழ் மன்றம், கல்ஹின்ன, கண்டி, ஸ்ரீலங்கா.

2. கவிஞர் வி.கந்தவனம் (1971), **வித்தியானந்த மாலை**, (தொகுப்பாசிரியர்), நுணாவிலூர் தமிழ்மன்றம், சாவகச்சேரி.

3. த.சண்முகசுந்தரம் (1984), **கலை மகிழ்நன் பேராசிரியர் வித்தியானந்தனின் வாழ்க்கைப்பணி**, மதிக்கலைஞர் வட்டம், குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

4. கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் (1984), **யாழ்ப் பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.வித்தியானந் தன் மணிவிழா மலர்.**

5. ஆ.வேலுப்பிள்ளை (1989), நினைவுப் பேருரை, **பேராசிரியர் வித்தியானந்தன் காட்டும் தமிழர் சால்புக் கோலம்**, கொழும்பு தமிழ்ச் சங்கம்.

6. என்.சோமகாந்தன் (1988), 'நந்தி', (தொகுப்பு), எழுத்தாளர் கூட்டுப்பதிப்பகம், யாழ்ப்பாணம்.

7. கட்டுரையாளருக்கு நேரில் கூறியவை.

## பேராசிரியர். சு. வித்தியானந்தன் நினைவு அறக்கட்டளையின் நோக்கம்

(1) பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்களது பிறந்த நாளாகிய மேத்திங்கள் எட்டாம் நாளை (மே-8) மைய மாகக் கொண்டு ஈழத் தமிழர் தம் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த விடயங்களைப் பேணுதல், பாதுகாத்தல், புத்தாக்கமுயற்சிகளில் ஈடுபடுதல்

(2) பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்களது புலமைச் சிரத்தைக் குரிய கூறுகளில் ஒன்றாக விளங்கிய 'நாட்டார் அரங்கு' தொடர்பான செயற்பாடுகளைப் பாடசாலை மட்டத்தை மையமாகக் கொண்டு இளையதலை முறையின ரிடையே கொண்டு செல்லுதல்' பரப்புகை செய்தல்.

(3) பாரம்பரிய அரங்கு தொடர்பான ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் முதலானவற்றை ஒழுங்குபடுத்துதல்.

(4) மேற்படி செயற்பாடுகளினூடே பேராசிரியர். சு. வித்தியானந்தன் அவர்கள் ஈழத்தமிழர் தம் சுதேசியம், கலைபண்பாடு முதலியனவற்றின் மீள்கண்டு பிடிப்பிற்கு ஆற்றிய பங்களிப்பினை வெளிக்கொணர்தல், கௌரவித்தல்.

# நன்றியுரை

பேராசிரியர். சுப்பிரமணியம். வித்தியானந்தனது நினைவுச் சொற்பொழிவை நிகழ்த்துவதில் காலமுணர்ந்து உதவி செய்த நல்லுள்ளங்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றோம்.

பேராசிரியர். சு. வித்தியானந்தனது சொற்பொழிவை நீங்களே ஆற்ற வேண்டும் என்றபோது உவகை பொங்க ஒத்துக்கொண்ட யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாட் பேராசிரியர். செ. சிவஞானசுந்தரம் ஐயா...

நினைவு நாள் நிகழ்ச்சியின் போது பல்வகை உரைகளையும் ஆற்றிய பேராசிரியரது அன்பு மாணவர்கள்...

நினைவு நாளுக்கான கலைநிகழ்வாக 'கீசகன்வதை' என்ற வடமோடி நாட்டுக்கூத்தை நினைவுநாளில் அரங்கேற்றிய வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினர்...

விளம்பர அன்பளிப்புக்களை நல்கிய 'மகாராணி பட்டுச்சோலை' நிறுவனத்தார் 'பெஷன்ஹவுஸ்' நிறுவனத்தார், 'அல்டி' நிறுவனத்தார்...

நினைவுச் சொற்பொழிவு பற்றிய விபரத்தை விளம்பரமாகவும், செய்தியாகவும் வெளியிட்ட உதயன், தினக்குரல், ஈழநாடு, வலம்புரி ஆகிய பத்திரிகை நிறுவனத்தார்கள்...

நினைவுச் சொற்பொழிவைப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்குப் பலவழிகளிலும் ஒத்துழைத்த பல்கலைக்கழகச் சமூகத்தினர், யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்...

இவர்கள் அனைவரும் நெஞ்சார்ந்த நன்றிக்குரியவர்கள்.

*- அறக்கட்டளையினர் -*



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 11 2330195.